**காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டம் (CRIWMP) - 2022**

---

காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் (CRIWMP) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு பசுமை காலநிலை நிதியத்திற்கும் (GCF) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்திற்கும் (UNDP) இடையில் கைச்சாத்திட்ட 2016 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய மானிய உடன்படிக்கையின் 17.01 (ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாயத் திணைக்களம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பன அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளனர்.

காலநிலை மாற்ற இடர் மற்றும் தாக்கங்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை பாதுகாக்க நீர் முகாமைத்துவத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை ஊடாக உலர் வலயத்தில் உள்ள சிறு விவசாயிகளின் குறிப்பாக பெண்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்வை மேம்படுத்தவும் எதிர்கொள்ளும் தன்மையை / நெகிழ்ச்சி தன்மையை அதிகரிப்பதற்கு இலங்கை அரசாங்கத்தின் (GOSL's) தொலைநோக்கிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். உலர்வலயத்தின் மூன்று ஆற்றுப்படுகைகளில் கிராமிய நீர்ப்பாசன முறைமைகளை விரிவாக்கம் செய்தலும் மேம்படுத்துதலும் மற்றும் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் விவசாய நடைமுறைகளினை அளவிடுதல், காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்வதை மேம்படுத்தல், பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆண்டு முழுவதும் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு நீர் வழங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்வுகளை பரவலாக்கல், நீர் முகாமைத்துவம் மற்றும் சிறு விவசாயிகளின் வறட்சி மற்றும் வெள்ளம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகியவற்றை தக்க வைக்கும் திறனை மேம்படுத்துவதற்கு காலநிலை, நீரியல் மற்றும் எதிர்வுகூறல் அமைப்பினை வலுப்படுத்துதல் போன்ற நான்கு அலகுகளின் கீழ் செயற்திட்டத்தின் பணிகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

மானியஉடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,521.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 52.084 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 5,499.71 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியன் பசுமை காலநிலை நிதியத்தால் (GCF) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. இலங்கை அரசாங்கத்தினால் எஞ்சிய தொகையான ரூபா 2,021.74 மில்லியன் நிதியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 ஜூலை இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 ஜூன் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 மறுப்பு அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையில் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஜுலை முதல் 2024 ஜுன் வரைக்குமான காலப்பகுதிக்காக இலங்கை அரசாங்கத்திற்கு (GOSL) ரூபா 5,499.71 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 38.084 மில்லியன் தொகையினை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP) மற்றும் பசுமை காலநிலை நிதியம் (GCF) ஆகியவற்றிற்கு இடையே 2017 ஜுன் 07 ஆம் திகதியன்று நிதியளிப்பு செய்யப்பட்ட செயல்பாட்டு உடன்படிக்கை (மானியம்) ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு (MMDE) செயற்திட்டத்தினை நிறைவேற்றும் நிறுவனமாகவும் UNDP அங்கீகாரமளிக்கும் நிறுவனமாகவும் இருக்கின்றது. இலங்கையின் உலர் வலயத்திலுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக சில விவசாயிகள் முகங் கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும் மற்றும் 2016 ஒக்தோபர் 04 | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நன்கொடையாளர் முகவரியினால் வழங்கப்பட்ட நிதி மத்திய வங்கியின் ஊடாக அனுப்பப்பட்டு செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதிய அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்திற்கிணங்க 2017 யூலை 01 ஆந் திகதி செயற்திட்ட கண்காணிப்பு பிரிவொன்று MMDE இன் கீழ் நிறுவப்பட்டது. FAA இன் (நிதியளிப்பு செய்யப்பட்ட செயற்பாட்டு உடன்படிக்கை) உட்பிரிவு 3 இன் பிரகாரம், நிதியளிக்கப்பட்ட செயற்பாட்டிற்கு நிதியளித்து உதவுவதற்கும், அதன் நோக்கத்திற்காகவும் ஐ.அ.டொலர் 38.084 பில்லியன் தொகையொன்று அங்கீகாரமளிக்கும் நிறுவனத்தினால் (UNDP) நிறைவேற்றல் நிறுவனத்திற்கு (MMDE) மானிய வடிவில் விடுவிக்கப்படும். கடந்த 06 ஆண்டுகளில் UNDP இற்கு ரூபா 6,650.66 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 30.01 மில்லியன் தொகையினை பசுமை காலநிலை நிதியம் விடுவித்திருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 வரையில் ரூபா 1,465.15 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 7.99 மில்லியன் மாத்திரம் MMDE இற்கு வழங்கப்பட்டிருந்தது மற்றும் ரூபா 2,776.61 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 13.94 மில்லியன் மீதியானது செயற்திட்டத்தின் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு UNDP இனால் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீதமுள்ள நிதியான ரூபா 2,408.9 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 8.08 மில்லியன் UNDP இனால் தக்க வைக்கப்பட்டிருந்தது.<br><br>நிதிக்கூற்றுக்களானது நிறைவேற்றும் நிறுவனத்திற்கு (MMDE) வழங்கப்பட்ட தொகையான மொத்த வழங்கலில் 26 சதவீதத்தை பிரதிநிதிததுவப்படுத்துகின்ற தொகைக்கு மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்ததால், முழு செயற்திட்டத்தின் நிதிச் செயலாற்றல் மற்றும் நிதி நிலைமை ஆகியவை நிதிக்கூற்றுக்களின் மூலம் பிரதிபலிக்கப்படவில்லை மற்றும் MMDE ஆல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு மட்டும் கணக்காய்வு பணிகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் பரீட்சை மீதியில் அடையாளம் காணப்படாத ரூபா 53 மில்லியன் செலவு மீதியொன்று திரண்ட நிதியமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும், அத்தகைய மீதியொன்று நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. கலந்துரையாடலின்போது கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் வெளிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | UNDP இனால் வழங்கப்பட்ட விநியோக அறிக்கையில் அர்ப்பணிப்புக் கட்டணங்கள் மற்றும் நிலுவையாகவுள்ள பெறப்பட்ட முற்பணத்துடன் தொடர்புடைய ஐ.அ.டொலர் 397,873.84 மில்லியனுக்கு சமனான ருபா 144.47 மில்லியன் பெறுமதியான பொறுப்புகள் உள்ளடங்கியிருந்தன. எவ்வாறான போதிலும், குறித்த கட்டணங்கள் | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. கலந்துரையாடலின்போது கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து பொறுப்புகளையும் வெளிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

மற்றும் நிலுவையாகவுள்ள முற்பணங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள்/ கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட ஆவணத்தின் அத்தியாயம் 69 இன் பகுதி 7 | ஒருங்கிணைந்த விநியோக அறிக்கை (CDR) நீர்ப்பாசன அமைச்சின் (அமுலாக்கல் முகவர்) செயலாளரினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2017 முதல் 2022 ஆம் காலப்பகுதிக்கான ஒருங்கிணைந்த விநியோக அறிக்கையினை அங்கீகரிக்கின்ற போது செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புபட்ட செலவுகளான ஐ.அ.டொலர் 12.5 மில்லியன் தொகையை மாத்திரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் செயலாளர் சான்றுறுதிப்படுத்தியிருந்தார். | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | எவ்வித நிபந்தனைகளும் இன்றி நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயலாளரினால் ஒருங்கிணைந்த விநியோக அறிக்கை அங்கீகரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | FAA இன் நிதிய முன்மொழிவின் B பிரிவு | 2022 ஆம் ஆண்டின் இறுதியில் பசுமை காலநிலை நிதியத்திடமிருந்து ரூபா 1,465.15 மில்லியன் (ஐ.அ.டொலர் 7.99 மில்லியன்) மற்றும் GOSL இடமிருந்து ரூபா 1,489.95 மில்லியன் (ஐ.அ.டொலர் 6.81 மில்லியன்) செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு பெறப்பட்டிருந்தது.<br><br>FAA இன் நிதிய முன்மொழிவின் பிரிவு B இன் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு 27% மற்றும் GCF இன் பங்களிப்பு 73% ஆகும். இதன்படி, இச்செயற்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவு ரூபா 461.62 | UNDP உடன் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தக் கடிதம் காரணமாக இந்த செயற்திட்டம் சர்ச்சைக்குரியதாக உள்ளது. இந்த ஒப்பந்தத்தில் UNDP உலகளாவிய சமூக நிதியத்தில் (GCF) இருந்து நிதியை அமுலாக்கப் பணிகளுக்குத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்ற உட்பிரிவு சேர்க்கப்படவில்லை.<br><br>இது உட்பிரிவு இலக்கம் 3 இலிருந்து விலகுவதற்கு வழிவகுத்ததுடன் GCF இன் வருமானத்திற்காக திறைசேரி இணை நிதியளிப்பு நிதியை | நிபந்தனையின்படி PMU இற்கு பெறப்பட்ட தொகையின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்களிப்பு விடுவிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மில்லியன் ஆக இருந்த போதிலும் , 2017 முதல் 2022 வரை ரூபா 1,423.95 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கை அரசாங்கத்தினால் இச்செயற்திட்டத்திற்கு ரூபா 962.33 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டுள்ளது. | மட்டுமே விடுவித்திருந்தது. செலவுகள் மற்றும் இணை நிதி ஏற்பாடுகள் பற்றிய சரியான அறிக்கையிடுதலை கோரி நிதி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது.<br><br>இதன்படி, UNDP ஆனது 2017 முதல் 2021 வரையிலான அமுலாக்க செலவு அறிக்கையை 2023 யூலை 20 இல் செயலாளர், நீர்ப்பாசன அமைச்சிற்கும் 2023 ஆகஸ்ட் 4 இல் செயலாளரின் சான்றுறுதியுடன் திறைசேரிக்கும் சமர்ப்பித்தது. | |
| (இ) | FAA இன் 2.01 உட்பிரிவு | அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் (UNDP) ”நிறைவேற்றும் நிறுவனத்தால் செயற்படுத்தப்படும் நிதியளித்தல் நடவடிக்கை கண்காணித்து மேற்பார்வை செய்யப்பட வேண்டும்” அந்த உட்பிரிவை கருத்தில் கொள்ளாமல், அங்கீகாரம் பெற்ற நிறுவனம் (UNDP) செயற்திட்ட செயற்பாடுகளை செயற்படுத்துவதில் ஈடுபட்டதுடன் மொத்த செலவில் 62.78 சதவீதமான தொகையான ரூபா 2,776.61 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொலர் 13.94 மில்லியன் தொகையை 2017-2022 காலப்பகுதியில் செலவிட்டிருந்தது. | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. கலந்துரையாடலின்போது கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்றும் நிறுவனத்தால் செயற்படுத்தப்பட வேண்டும் மற்றும் FAA இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,408.6 மில்லியன் மதிப்புள்ள 116 எண்ணிக்கையிலான ஒப்பந்தங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு இறுதி வரை 244 குளங்களை புனரமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள், ரூபா 617.6 மதிப்புள்ள 30 ஒப்பந்தப் பொதிகளைச் சேர்ந்த 53 குளங்கள் 50% ஆன நிர்மாணங்கள் முடிவுற்ற பின்னர் 3 ஆண்டுகளுக்கு செயற்படற்று இருந்தன. | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. கலந்துரையாடலின்போது கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட இலக்குகளை அடைவதற்க அனைத்து செயற்திட்ட நடவடிக்கைகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட ஆவணத்தின் IX (111) & X ஆம் உட்பிரிவின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 வரை GOSL கூறுகளின் எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு ஐ.அ.டொலர் 12.6 மில்லியனாக இருந்தது. இருப்பினும், 54.09 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 6.8 மில்லியன் மட்டுமே 2022 திசெம்பர் 31 வரை GOSL ஆல் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது. | பதில் சமர்ப்பிக்கப்பட வில்லை. கலந்துரையாடலின்போது கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப நன்கொடையாளரின் ஒப்புதலுடன் செயற்திட்ட ஆவணத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3.2 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் விடயங்கள் தீர்க்கப்படாமலேயே இருந்தன.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| UNDP இனால் வழங்கப்பட்ட விநியோக அறிக்கையில் அர்ப்பணிப்புக் கட்டணங்கள் மற்றும் சான்றுபடுத்தப்படாத வேலைகளுடன் தொடர்புடைய ஐ.அ.டொலர 2.3 மில்லியனுக்கு சமனான ருபா 458.09 மில்லியன் பெறுமதியான பொறுப்புகள் உள்ளடங்கியிருந்தன. எவ்வாறான போதிலும், குறித்த அர்ப்பணிப்பு கட்டணங்கள் மற்றும் சான்றுபடுத்தப்படாத பணிகளின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலக்கிரமத்தில் நிதிக்கூற்றுக்களுடன் விரிவான விபரமொன்று உங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். | 2021 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளரின் பரிந்துரைக்கு திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |